***சிசி. 232/2018 அசா.3 பாலசுந்தரம் த.பெ.செல்லமுத்து தேதி 04.10.2023***

*(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)*

*(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)*

***எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை***

*முதல்விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்துதான் விசாரித்தனர், அதன்பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் விபத்தில் இறந்துபோன பிரகாஷ் தனது வாகனத்தினை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டியதாலேயே விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்துபோன பாலமுருகன் எனது தம்பி என்பதால் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக கேள்விப்படாத சம்பவத்தை கேள்விப்பட்டதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.*

***மறுவிசாரணை இல்லை***